# 6th Social Science Lesson 6 Notes in Tamil


## 6] நிலப்பரப்பும் பெருங்கடல்களும்

***பாஞ்சியா***

*இது பெருங்கண்டம் எனப்படும். இப்பெருங்கண்டத்தைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு பான்தலாசா ஆகும். 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்த இந்நிலப்பரப்பு மெதுவாக நகரத் தொடங்கியது. நாளடைவில் கண்டங்களும், பெருங்கடல்களும் தற்போதுள்ள நிலையை அடைந்தன.*

*இதற்குக் காரணம் புவியினுள் உள்ள வெப்பம் தான்.*

- புவியின் மேற்பரப்பு 71 சதவிகிதம் **நீரால்** சூழப்பட்டுள்ளது. எஞ்சிய 29 சதவிகிதம் **நிலத்தால்** சூழப்பட்டுள்ளது. மேலும், புவியின் மேற்பரப்பு சீராக காணப்படுவதில்லை. புவியில் உயர்ந்த மலைகள், ஆழ்கடல்கள் மற்றும் பல்வேறு வகையான நிலத்தோற்றங்கள் காணப்படுகின்றன. இந்நிலத்தோற்றங்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.




***சங்க இலக்கியத்தில் நிலவகைப்பாடு***

***குறிஞ்சி*** *– மலையும் மலைசார்ந்த நிலமும்*

***முல்லை*** *– காடும் காடு சார்ந்த நிலமும்*

***மருதம்*** *– வயலும் வயல் சார்ந்த நிலமும்*

***நெய்தல்*** *– கடலும் கடல் சார்ந்த நிலமும்*

***பாலை*** *– மணலும் மணல் சார்ந்த நிலமும்*

1. **முதல் நிலை நிலத்தோற்றங்கள் (First order landforms)**


- கண்டங்கள் மற்றும் பெருங்கடல்கள் முதல்நிலை நிலத்தோற்றங்கள் ஆகும். மிகப் பெரும் நிலப்பரப்பினைக் கண்டங்கள் எனவும் பரந்த நீர்ப்பரப்பினை **பெருங்கடல்கள்** எனவும் அழைக்கிறோம்.
- உலகில் ஏழு **கண்டங்கள்** உள்ளன. அவை **ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிகா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா.** உலகின் மிகப்பெரிய கண்டம் ஆசியா ஆகும். ஆஸ்திரேலியா மிகச் சிறிய கண்டமாகும்.
- புவியில் ஐந்து பெருங்கடல்கள் காணப்படுகின்றன. அவை **பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென்பெருங்கடல் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடல் ஆகும்.**
- இவற்றுள் பசிபிக் பெருங்கடல் மிகப்பெரியது. ஆர்க்டிக் பெருங்கடல் மிகச்சிறியதாகும்.

***நிலச்சந்தி***

*இரண்டு பெரிய நிலப்பரப்புகளை இணைக்கக் கூடியதும் அல்லது இரண்டு பெரிய நீர்ப்பரப்புகளை பிரிக்கக் கூடியதுமான மிக குறுகிய நிலப்பகுதி நிலச்சந்தி ஆகும்.*

2. **இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள் (Second order landforms)**

- மலைகள் , பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள் என அழைக்கப்படுகின்றன.




இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள்:
மலை, பீடபூமி, சமவெளி

**மலைகள் (Mountains)**

- சுற்றுப்புற நிலப்பகுதியை விட 600 மீட்டருக்கு மேல் உயர்ந்து காணப்படும் நிலத்தோற்றம் **மலைகள்** ஆகும். இவை வன்சரிவைக் கொண்டிருக்கும். இவை தனித்தோ அல்லது தொடர்களாகவோ காணப்படுகின்றன.
- தொடர்ச்சியாக நீண்டு காணப்படும் மலைகள் மலைத்தொடர் எனப்படும். பொதுவாக மலைத் தொடர்கள் பல நூறு கிலோ மீட்டர் முதல் பல்லாயிரம் கிலோ மீட்டர் வரை பரவிக் காணப்படுகின்றன.
- உதாரணமாக, ஆசியாவில் உள்ள **இமயமலைத்தொடர்,** வட அமெரிக்காவில் உள்ள **ராக்கி** மலைத்தொடர் மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள **ஆண்டிஸ்** மலைத்தொடர் ஆகியவற்றைக் கூறலாம்.
- உலகின் நீளமான மலைத்தொடர் தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டிஸ் மலைத்தொடராகும். இது சுமார் 7000 கிலோமீட்டர் நீளத்திற்கு வடக்குத் தெற்காகப் பரவியுள்ளது.

- ஒரு மலைத்தொடரின் உயரமான பகுதி சிகரம் எனப்படுகிறது. உலகிலேயே உயரமான சிகரம் இமயமலைத் தொடரில் உள்ள எவரெஸ்ட் (8848 மீட்டர்) ஆகும்.
- மலைகள், ஆறுகள் உற்பத்தியாகும் இடமாகத் திகழ்கின்றன. இவை தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் இருப்பிடமாகவும் உள்ளன. சில மலைப்பகுதிகள் சிறந்த சுற்றுலாத் தலங்களாகவும், கோடை வாழிடங்களாகவும் விளங்குகின்றன.
- உதகமண்டலம், கொடைக்கானல், கொல்லிமலை, ஏற்காடு மற்றும் ஏலகிரி போன்ற கோடை வாழிடங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

➢ ***டிசம்பர் 11 சர்வதேச மலைகள் தினம்***

**பீடபூமிகள் (Plateaus)**

- சமமான மேற்பரப்பைக் கொண்ட உயர்த்தப்பட்ட நிலப்பரப்பு பீடபூமி ஆகும். இவை மலைகளைப் போன்று வன்சரிவுகள் கொண்டவை.
- பீடபூமிகள் நூறு மீட்டலிருந்து பல்லாயிரம் மீட்டர் வரை உயர்ந்து காணப்படுகின்றன. உலகிலேயே உயர்ந்த பீடபூமி **திபெத் பீடபூமியாகும்.** ஆகவே திபெத் பீடபூமியை **"உலகத்தின் கூரை"** என்று அழைக்கிறோம்.
- பீடபூமி சமமான மேற்பரப்பைக் கொண்டுள்ளதால் **"மேசைநிலம்"** எனவும் அழைக்கப்படுகிறது. பொதுவாக பீடபூமிகளில் கனிமங்கள் நிறைந்து காணப்படுகின்றன.
- இந்தியாவில் காணப்படும் **சோட்டா நாகபுரி பீடபூமி** கனிமங்கள் நிறைந்த பகுதியாகும். எனவே சுரங்கத்தொழில் இப்பகுதியின் முக்கியத் தொழிலாகும். தென்னிந்தியாவில் உள்ள **தக்காணப் பீடபூமி** எரிமலைப் பாறைகளால் ஆனது.

✓ *தருமபுரி பீடபூமி, கோயமுத்தூர் பீடபூமி மற்றும் மதுரை பீடபூமி ஆகியன தமிழ்நாட்டில் காணப்படும் பீடபூமிகளாகும்.*

**சமவெளிகள் (Plains)**


- சமவெளி சமமான மற்றும் தாழ் நிலத் தோற்றமாகும். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 200மீ க்கும் குறைவான உயரம் கொண்ட நிலத்தோற்றம் ஆகும். சில சமவெளிகள் சீரற்றதாகவும் காணப்படும்.
- பெரும்பாலும் சமவெளிகள், ஆறுகள், அதன் துணை ஆறுகள் மற்றும் கிளை ஆறுகளால் உருவாக்கப்படுகின்றன. இங்கு வளமான மண்ணும் நீர்ப்பாசனமும் இருப்பதால் வேளாண்மை தழைத்தோங்குகிறது.
- மக்கள் வாழ்வதற்கு சமவெளிகள் ஏற்றதாய் உள்ளன. எனவே அவை உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட பிரதேசங்களாக விளங்குகின்றன.
- மிகப் பழைய நாகரிகங்களான மெசபடோமியா நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகம் போன்றவை சமவெளிகளில் தோன்றியதை அறிவீர்கள். வடஇந்தியாவிலுள்ள கங்கைச் சமவெளி உலகின் பெரிய சமவெளிகளில் ஒன்றாகும்.
- தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சமவெளிகள் காவிரி மற்றும் வைகை ஆறுகளால் உருவாக்கப்பட்டவை ஆகும்.
- பெருங்கடல்கள் மற்றும் கடல்களை ஒட்டியுள்ள தாழ்நிலங்கள் கடற்கரைச் சமவெளிகள் ஆகும்.


✓ *ஆற்றுச் சமவெளிகள் பண்டைய நாகரிகங்களின் தொட்டிலாக விளங்கின. இந்தியாவில் சிந்து நதி மற்றும் எகிப்தி நைல் நதி போன்ற ஆற்றுச் சமவெளிகளில் நாகரிகங்கள் தோன்றி செழித்தோங்கி வளர்ந்தன.*

**3. மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள்** (Third order landforms)

- ஆறுகள், பனியாறுகள், காற்று மற்றும் கடல் அலைகள் போன்றவற்றின் முக்கியச் செயல்கள் அரித்தல் மற்றும் படியவைத்தல் ஆகும். இச்செயல்களால் மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகளில் தோற்றுவிக்கப்படும் பள்ளத்தாக்குகள், மொரைன்கள், மணற்குன்றுகள் மற்றும் கடற்கரைகள் போன்ற நிலத்தோற்றங்கள் மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.

✓ *புவியின் மேற்பரப்பிலுள்ள பொருள்களை (பாறைகள்) அரித்து அகற்றுதலே **அரித்தல்** எனப்படுகிறது. இவ்வாறு அரிக்கப்பட்ட பாறை துகள்கள் கடத்தப்பட்டு தாழ்நிலப் பகுதிகளில் படிய வைக்கப்படுகின்றன. இச்செயல் **படியவைத்தல்** எனப்படுகிறது.*









**4. பெருங்கடல்கள்** (Oceans)

விண்வெளியில் இருந்து பார்க்கும் போது புவி நீல நிறமாக காட்சியளிக்கும். புவியின் மூன்றில் இரண்டு பங்கு நீர்ப்பரப்பாக உள்ளதே இதற்குக் காரணமாகும். கடல்களும், பெருங்கடல்களும் இந்நீரினைக் கொண்டுள்ளன. பெரும் நீர்ப்பரப்பு, பெருங்கடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிலத்தால் சூழப்பட்ட பெரிய நீர்ப்பரப்பு கடல் எனப்படுகிறது.

புவியில் காணப்படும் ஐந்து பெருங்கடல்களை ஏற்கனவே அறிந்துள்ளீர்கள். அவற்றைப் பற்றி தற்போது காணலாம்.




பெருங்கடல்களின் பரப்பளவு (%)

**பசிபிக் பெருங்கடல்** (The Pacific Ocean)

- புவியின் **மிகப்பெரிய மற்றும் ஆழமான பெருங்கடல்** பசிபிக் பெருங்கடல் ஆகும். இது புவியின் மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டுள்ளது.

- இதன் பரப்பளவு சுமார் 168.72 மில்லியன் சதுர கிலோ மீட்டர் ஆகும். பசிபிக் பெருங்கடலின் மேற்கில் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவும், கிழக்கில் வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவும் எல்லைகளாக உள்ளன. இது வடக்குத் தெற்காக ஆர்க்டிக் பெருங்கடல் முதல் தென் பெருங்கடல் வரை பரவியுள்ளது.
- இப்பெருங்கடல் முக்கோண வடிவத்தில் காணப்படுகிறது. முக்கோண வடிவத்தின் மேற்பகுதி பசிபிக் பெருங்கடலையும் ஆர்டிக் பெருங்கடலையும், இணைக்கும் பெரிங் நீர்ச்சந்தியில் காணப்படுகிறது.
- பெரிங் கடல், சீனக் கடல், ஜப்பான் கடல், தாஸ்மானியா கடல், பிலிப்பைன்ஸ் கடல் ஆகியவை பசிபிக் பெருங்கடலில் உள்ள எல்லையோரக் கடல்களாகும்.
- இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஹவாய், நியூசிலாந்து உள்ளிட்ட பல தீவுகள் பசிபிக் பெருங்கடலில் உள்ளன. புவியின் ஆழமான பகுதியான மரியான அகழி (10,994 மீ⁻) பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ளது.
- பசிபிக் பெருங்கடலைச் சுற்றி எரிமலைகள் தொடர்ச்சியாக அமைந்துள்ளதால் பசிபிக் "நெருப்பு வளையம்" என அழைக்கப்படுகிறது.




பசிபிக்பெருங்கடல் மற்றும் அதன் எல்லையோர கடல்கள்

- ✓ *உலகின் உயரமான **எவரெஸ்ட் சிகரம்** (8,848மீ) **மரியானா அகழியில்** (10,994 மீ⁻) மூழ்கிவிடும் என்றால் அதன் ஆழத்தை உணர்ந்தறிவாயாக.*
- ✓ *கடலின் ஆழத்தை மீ⁻ என்ற குறியீட்டால் குறிப்பிட வேண்டும்.*
- ✓ *ஸ்பெயின் நாட்டின் மாலுமி பெர்டினாண்டு மெகல்லன் பசிபிக் என பெயரிட்டார். பசிபிக் என்பதன் பொருள் அமைதி என்பதாகும்.*

**அட்லாண்டிக் பெருங்கடல்** (The Atlantic Ocean)




அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் அதன் எல்லையோரக் கடல்கள்

- புவியின் இரண்டாவது பெரிய பெருங்கடல் அட்லாண்டிக் பெருங்கடல் ஆகும். இதன் பரப்பளவு சுமார் 85.13 மில்லியன் சதுர கி.மீட்டர் ஆகும். இது புவியின் மொத்த பரப்பளவில் ஆறில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.
- அட்லாண்டிக் பெருங்கடலின் கிழக்கே ஐரோப்பாவும், ஆப்பிரிக்காவும் மேற்கே வட அமெரிக்காவும், தென் அமெரிக்காவும் எல்லைகளாக உள்ளன.
- பசிபிக் பெருங்கடலைப் போன்றே இப்பெருங்கடலும் வடக்கே ஆர்க்டிக் பெருங்கடல் முதல் தெற்கே தென் பெருங்கடல் வரை பரவியுள்ளது. இப்பெருங்கடல் ஆங்கில எழுத்து 'S' வடிவத்தைப் போன்று உள்ளது.
- ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி அட்லாண்டிக் பெருங்கடலையும், மத்தியத் தரைக் கடலையும் இணைக்கிறது. கிழக்கு மற்றும் மேற்கு அரைக்கோளங்களுக்கு இடையேயான கப்பல் போக்குவரத்து அட்லாண்டிக் பெருங்கடலில் அதிகமாக நடைபெறுகிறது.
- **போர்ட்டோ ரிக்கோ** அகழியில் காணப்படும் **மில்வாக்கி** அகழி அட்லாண்டிக் பெருங்கடலின் ஆழமான பகுதியாகும். இது 8,600 மீ - ஆழமுடையது ஆகும்.
- கரீபியன் கடல், மெக்சிகோ வளைகுடா, வடகடல், கினியா வளைகுடா, மத்திய தரைக் கடல் போன்றவை அட்லாண்டிக் பெருங்கடலின் முக்கிய எல்லையோரக் கடல்களாகும்.
- செயிண்ட் ஹெலனா, நியூபவுண்ட்லாந்து, ஐஸ்லாந்து, ஃபாக்லாந்து உள்ளிட்ட பல தீவுகள் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ளன.


கண்டங்கள் மற்றும் பெருங்கடல்கள்
வட அமெரிக்கா
தென் அமெரிக்கா
ஐரோப்பா
ஆசியா
ஆப்ரிக்கா
ஆஸ்திரேலியா
அண்டார்டிக்கா
பசிபிக் பெருங்கடல்
ஆட்லாண்டிக் பெருங்கடல்
ஆர்டிக் பெருங்கடல்
இந்தியப் பெருங்கடல்
தென் பெருங்கடல்
மிகப்பெரிய மற்றும் மிக ஆழமான பெருங்கடல்
மிக ஆழமான பகுதி - மரியானா அகழி (10,994 மீ)
எரிமலை நெருப்பு வளையம் இங்கு உள்ளது
ஆங்கில "S" எழுத்து வடிவில் காணப்படுகிறது
இரண்டாவது மிகப்பெரிய பெருங்கடல்
கிழக்கு மற்றும் மேற்கு அரைக்கோளங்களுக்கு இடையிலான கப்பல் போக்குவரத்து இங்கு அதிகம் நடைபெறுகிறது
மிகச்சிறிய பெருங்கடல்
வருடத்தில் பெரும்பான்மையான நாட்கள் பனி உறைந்துக் காணப்படும்
ஆழமான பகுதி - யுரேஷியன் படுகை
பரப்பளவில் ஆறாவது பெரியக்கண்டம்
உலக மக்கள்தொகையில் மூன்றாவது இடம்
பரப்பளவில் மிகப்பெரிய கண்டம்
உலக மக்கள்தொகையில் முதலிடம்
அண்டார்டிக்காவை சுற்றி அமைந்துள்ளது
பசிபிக் அட்லாண்டிக் மற்றும் இந்தியப்பெருங்கடல்களின் தென் பகுதிகள் இதன் எல்லைகளாகும்
ஆழமான பகுதி "தென் சான்ட்விச் அகழி"
இந்திய நாட்டின் பெயரால் அழைக்கப்படுகிறது
மூன்றாவது பெரிய பெருங்கடல்
முக்கோண வடிவில் காணப்படுகிறது
பரப்பளவில் மூன்றாவது பெரியக்கண்டம்
உலக மக்கள்தொகையில் நான்காவது இடம்
பரப்பளவில் இரண்டாவது பெரியக்கண்டம்
உலக மக்கள்தொகையில் இரண்டாவது இடம்
பரப்பளவில் நான்காவது பெரியக்கண்டம்
உலக மக்கள்தொகையில் ஐந்தாவது இடம்
பரப்பளவில் ஐந்தாவது பெரியக்கண்டம்
நிரந்தர குடியிருப்புகள் கிடையாது
சுமார் 4000 ஆராய்ச்சியாளர்கள் இங்கு தங்கியுள்ளனர்
பரப்பளவில் மிகச்சிறியக் கண்டம்
உலக மக்கள்தொகையில் ஆறாவது இடம்
அளவையில் இல்லை

**இந்தியப் பெருங்கடல் (The Indian Ocean)**




இந்தியப் பெருங்கடல் மற்றும் அதன் எல்லையோர கடல்கள்

- இந்தியப் பெருங்கடல் புவியின் மூன்றாவது பெரிய பெருங்கடல் ஆகும். இதன் பரப்பு சுமார் 70.56 மில்லியன் சதுர கி.மீ ஆகும். இந்தியாவிற்கு அருகாமையில் உள்ளதால் இப்பெருங்கடல் இப்பெயரைப் பெற்றது. இது முக்கோண வடிவத்தைக் கொண்டுள்ளது. இப்பெருங்கடல் மேற்கே ஆப்பிரிக்கா வடக்கே ஆசியா, கிழக்கே ஆஸ்திரேலியா போன்ற கண்டங்களால் சூழப்பட்டுள்ளது.
- இந்தியப் பெருங்கடலில் அந்தமான் நிக்கோபார், லட்சத் தீவுகள், மாலத் தீவுகள், இலங்கை , மொரிஷியஸ், ரீயூனியன் உள்ளிட்ட பல தீவுகள் காணப்படுகின்றன. மலாக்கா நீர்ச்சந்தி இந்தியப் பெருங்கடலையும் பசிபிக் பெருங்கடலையும் இணைக்கிறது.
- இந்தியப் பெருங்கடலில் வங்காள விரிகுடா, அரபிக் கடல், பாரசீக வளைகுடா மற்றும் செங்கடல் போன்ற கடல்கள் எல்லையோரக் கடல்களாக உள்ளன. இப்பெருங்கடலின் ஆழமான பகுதி ஜாவா அகழியாகும். இதன் ஆழம் 7,725 மீ $^{-}$ ஆகும்.

✓ பாக் நீர்ச்சந்தி வங்காள விரிகுடாவையும் பாக் வளைகுடாவையும் இணைக்கிறது.

➢ $6^{\circ}$ கால்வாய் – இந்திரா முனையையும் இந்தோனேசியாவையும் பிரிக்கிறது.


➢ $8^{\circ}$ கால்வாய் மாலத் தீவையும் மினிக்காய் தீவையும் பிரிக்கிறது.

➢ $9^{\circ}$ கால்வாய் லட்சத்தீவையும் மினிக்காய் தீவையும் பிரிக்கிறது.

➢ $10^{\circ}$ கால்வாய் அந்தமான் தீவையும் நிக்கோபர் தீவையும் பிரிக்கிறது.

**தென் பெருங்கடல் (The Southern Ocean)**

winmeen.com




தென் பெருங்கடல் மற்றும் அதன் எல்லையோரக் கடல்கள்

- தென்பெருங்கடல் அண்டார்க்டிகாவை சுற்றி அமைந்துள்ளது. தென் பெருங்கடல் 60° தெற்கு அட்சத்தால் சூழப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 21.96 மில்லியன் சதுர கி.மீ. ஆகும். தென் பெருங்கடல் இந்தியப் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடல்களின் தென் பகுதிகளால் சூழப்பட்டுள்ளது.
- ராஸ் கடல், வெடல் கடல் மற்றும் டேவிஸ் கடல் இதன் எல்லையோரக் கடல்களாகும். ஃபோர்வெல் தீவு, பௌமன் தீவு, ஹார்ட்ஸ் தீவு போன்ற தீவுகள் இப்பெருங்கடலில் காணப்படுகின்றன. இது அருகிலுள்ள பெருங்கடல்களைக் காட்டிலும் குளிர்ச்சியாக உள்ளது. இதன் பெரும்பான்மையான பகுதி பனிப்பாறைகளால் சூழப்பட்டுள்ளது. இப்பெருங்கடலின் ஆழமான பகுதி **'தென் சான்ட்விச் அகழி'** (7,235 மீ ‑ ஆழம்) ஆகும்.

**ஆர்க்டிக் பெருங்கடல் (The Artic Ocean)**




ஆர்க்டிக் பெருங்கடல் மற்றும் அதன் எல்லையோரக் கடல்கள்

- ஆர்க்டிக் பெருங்கடல் மிகச் சிறியது ஆகும். இதன் பரப்பளவு சுமார் 15.56 மில்லியன் சதுர கி.மீ. இது ஆர்க்டிக் வட்டத்தினுள் அமைந்துள்ளது. வருடத்தின் பெரும்பான்மையான நாட்களில் இப்பெருங்கடல் உறைந்தே காணப்படும்.
- நார்வே கடல், கிரீன்லாந்து கடல், கிழக்கு சைபீரியக் கடல் மற்றும் பேரண்ட் கடல் போன்றவை இதன் எல்லையோரக் கடல்களாகும்.
- கிரீன்லாந்து தீவு, நியூ சைபீரியத் தீவு மற்றும் நவோயா செமல்யா போன்ற தீவுகள் இப்பெருங்கடலில் காணப்படுகின்றன.
- வட துருவம் ஆர்க்டிக் பெருங்கடலின் மையத்தில் அமைந்துள்ளது. இப்பெருங்கடலின் ஆழமான பகுதி '**யுரேசியன் தாழ்நிலம்**' ஆகும். இதன் ஆழம் சுமார் 5,449 மீட்டர் ஆகும்.

winmeen.com